பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

22 08 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் மசோதா படைப்பாற்றலை ஊக்குவிப்பதுடன், தீய விளைவுகளில் இருந்து சமூகத்தைக் காப்பாற்றும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நெல்லையில் இன்று நடைபெறும் பிஜேபி பூத் கமிட்டி மாநாட்டில் பங்கேற்கிறார்.
- தமிழகத்தில் உழவர் நல சேவை மையங்கள் மூலம் விவசாயிகள் அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற முடியும் என்று மாநில அமைச்சர் திரு. எம்.ஆர்.கே பன்னீர் செல்வம் கூறியுள்ளார்.
- விவசாயிகள் நலனுக்கான திட்டங்களை திமுக அரசு முறையாக செயல்படுத்தவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- 20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் காஜல் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் மசோதா படைப்பாற்றலை ஊக்குவிப்பதுடன், தீய விளைவுகளில் இருந்து சமூகத்தைக் காப்பாற்றும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இது, இந்தியாவை விளையாட்டு, புதுமை மற்றும் படைப்பாற்றலுக்கான மையமாக மாற்றுவதற்கான அரசின் உறுதியை எடுத்துக்காட்டுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

மின்னணு விளையாட்டுளை அரசு ஊக்குவிக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

அதே நேரம் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள மசோதா பணம் தொடர்பாக பாதிப்பை ஏற்படுத்தும் விளைவுகளிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்கும் என்று திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**<<<<>>>>**

லட்சாதிபதி சகோதரிகள் திட்டத்தின் மூலம் இதுவரை 2 கோடியே 80 லட்சம் மகளிர் லட்சாதிபதிகளாக மாறியுள்ளதாக மத்திய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

தில்லியில் இத்துறைகளின் ஊழியர்களுக்கான பயிற்சிக் கூட்டத்தில் பேசிய அவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண் துறையும் கிராமப்புற வளர்ச்சித் துறையும் முக்கிய பங்காற்றுவதாகக் கூறினார்.

ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் லட்சாதிபதி சகோதரிகள் திட்டத்தில், 3 கோடி பெண்களை லட்சாதிபதிகளாக்கும் இலக்கு விரைவில் எட்டப்படும் என்று அவர் கூறினார்.

வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் விவசாய மேம்பாட்டில் புதிய புரட்சியை ஏற்படுத்தி இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வேளாண் வளர்ச்சியை அதிகரிக்க மத்திய அரசுடன் மாநில அரசுகளும் இணைந்து செயல்பட வேண்டும் என்று திரு சிவராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சரும் பிஜேபி மூத்த தலைவருமான திரு அமித் ஷா இன்று திருநெல்வேலி வருகிறார்.

பிற்பகலில் தூத்துக்குடி விமான நிலையம் வரும் அவர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் நெல்லை செல்கிறார்.

அங்கு நடைபெறும் 5 மக்களவைத் தொகுதிகள் மற்றும் 28 சட்டப் பேரவைத் தொகுதிகளை உள்ளடக்கிய பிஜேபி பூத் கமிட்டி மாநாட்டில் அவர் பங்கேற்கிறார்.

இதில் சுமார் ஒரு லட்சம் பேர் பங்கேற்க உள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

உள்துறை அமைச்சரின் வருகையை முன்னிட்டு நெல்லையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மாநாடு நடைபெறும் பகுதியில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இன்று காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை நெல்லையில் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்படுவதாக மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் உழவர் நல சேவை மையங்கள் மூலம் விவசாயிகள் அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற முடியும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு. எம்ஆர்கே பன்னீர் செல்வம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த ஆண்டு ஆயிரம் உழவர் நல சேவை மையங்களை அமைக்க 42 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த மையங்களை அமைக்க வேளாண் பட்டதாரிகள் மற்றும் பட்டய படிப்பு படித்தோருக்கு 3 லட்சம் ரூபாய் முதல் 6 லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்மையங்களில் விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள், விதைகள் வழங்கப்படுவதுடன் பயிர் மேலாண்மைக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மையங்களை அமைக்கும் வாய்ப்பை தகுதி உடையோர் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் திரு எம்ஆர்கே பன்னீர் செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

விவசாயிகள் நலனுக்கான திட்டங்களை திமுக அரசு முறையாக செயல்படுத்தவில்லை என அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

காஞ்சிபுரம், உத்திரமேரூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் நேற்று அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

விவசாயிகள் நலனுக்காக அஇஅதிமுக ஆட்சியில் குடிமராமத்துத் திட்டம் செயல்படுத்தப்பட்டதாகவும், தற்போதைய அரசு அதைக் கைவிட்டுள்ளதாகவும் கூறினார்.

முந்தைய ஆட்சியில் விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டதாகக் கூறிய அவர், தற்போது குறிப்பிட்ட நேரம் மட்டுமே மின் விநியோகம் செய்யப்படுவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அம்மா மினி கிளினிக்குகள், மாணவர்களுக்கு இலவச லேப்டாப் உள்ளிட்ட பல திட்டங்களை திமுக அரசு நிறுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

மீண்டும் அஇஅதிமுக ஆட்சி அமைத்தால் இத்திட்டங்களைத் தொடர்பவதுடன் மேலும் பல புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<>>>>

சேலத்தில் உள்ள ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிறு குறு நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

இந்த நிறுவனத்தில் மேம்படுத்தப்பட்ட ஆய்வகத்தை திறந்து வைத்து வேதிப்பொருள் இல்லாத ஜவ்வரிசி விற்பனையை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜவ்வரிசியை அனைவரும் வாங்கிப் பயன்படுத்தும் வகையில் இந்த விற்பனை தொடங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஜவ்வரிசி உணவு வகைகள் பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தில் சோதனை அடிப்படையில் சேர்க்கப்பட்டு பின்னர் அது தொடர்பாக முடிவு மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மரவள்ளி விவசாயிகளுக்கு உரிய விலை வழங்குவது தொடர்பாக வரும் 2ஆம் தேதி சேலம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற உள்ளதாக திரு. தா.மோ. அன்பரசன் தெரிவித்தார்.

**<<<<>>>>**

சிறந்த தலைவருக்கான இலக்கணமாக மறைந்த முன்னாள் நாகாலாந்து ஆளுநர் இல கணேசன் திகழ்ந்ததாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற புகழஞ்சலிக் கூட்டத்தில் பேசிய அவர், தமிழகத்தில் பிஜேபி-யின் வளர்ச்சிக்கு இல கணேசன் கடுமையாக உழைத்தார் எனவும், அனைத்து கட்சியினரின் நன்மதிப்பைப் பெற்றவராக திகழ்ந்தார் என்றும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலினின் உரையை மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் வாசித்தார்.

அரசியல் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டு அனைவரது அன்பையும் பெற்றவராக இல. கணேசன் திகழ்ந்தார் என்றும், பொதுவாழ்வில் ஈடுபடுபவர்களுக்கு முன்னுதாரணமாக அவர் விளங்கினார் என்றும் அந்த உரையில் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் அஇஅதிமுக, நாம் தமிழர், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்று மறைந்த இல கணேசனுக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

**<<<<>>>>**

சென்னை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1639-ம் ஆண்டு இதே நாளில் சென்னை நகரம் உருவான தினத்தை நினைவு கூரும் வகையில் 2004-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 22-ம் தேதி சென்னை தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இன்று 386-வது சென்னை தினம் கொண்டாடப்படுவதையொட்டி, பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும், மாணவ-மாணவிகள் பங்கேற்கும் போட்டிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

தமிழகத்தின் சில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் அடுத்த சில மணி நேரங்களுக்கு மிதமான மழை பெய்யக் கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே சென்னையிலும் புறநகர் பகுதிகளிலும், பல்வேறு இடங்களில் இன்று அதிகாலை முதல் பரவலாக கனமழை பெய்து வருகிறது.

செங்கல்பட்டு மாவட்டத்திலும் பல இடங்களில் கனமழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

<u>இருவரிச் செய்திகள்</u>

ஸ்பெயினில் காட்டுத் தீ காரணமாக 4 லட்சம் ஹெக்டேர் வனப்பகுதி பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

ஃபிஜி பிரதமர் திரு சிதிவேனி லிகமமடா ரபுகா மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக நாளை மறுநாள் இந்தியா வருகிறார்.

<<<<>>>>

பெட்ரோலுடன் எத்தனால் கலக்கும் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு இதுவரை ஒரு லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

<<<<>>>>

நடப்பு கல்வி ஆண்டில் மாணவர்களுக்கான இலக்கியத் திறனறி தேர்வு அக்டோபர் 11-ம் தேதி நடைபெறும் என்றும், இதற்கு செப்டம்பர் 4-ம் தேதிக்குள் விண்ணப்பிக்காலம் என்றும் அரசுத் தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில், பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி சிவ சௌந்தரவல்லி வழங்கினார்.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் நெடுவயல் அரசு மேல்நிலைப் பள்ளியில் சிஎஸ்ஐஆர் சார்பில் அடல் டிங்கரிங் ஆய்வகம் குறித்து மாணவர்கள் - விஞ்ஞானிகள் இடையே கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

<<<<>>>>

நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ப தொழிற்கல்வி மாணவர்களின் திறன்களை மேம்படுத்துவது குறித்த ஆய்வுக் கூட்டம் திருவள்ளூரில் மாவட்ட ஆட்சியர் திரு பிரதாப் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம், பச்சாம்பாளையம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் நின்று கொண்டிருந்த லாரி மீது ஆம்னி வேன் மோதியதில் 3 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

காஞ்சிபுரத்தில் நான் முதல்வன் திட்டத்தில் உயர் கல்விக்குத் தேர்வான மாணவர்களுக்கு சேர்க்கை ஆணைகளை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் வழங்கினார்.

<<<<>>>>

விருதுநகரில் தூய்மைப் பணியாளர்களுக்கு நலவாரிய அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகளை, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரியத் தலைவர் திரு. ஆறுமுகசாமி வழங்கினார்.

<<<<>>>>

சென்னை விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் தாய்லாந்தில் இருந்து கடத்தி வரப்பட்ட 12 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

<<<<>>>>

விளையாட்டுச் செய்தி

20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் காஜல் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பல்கேரியாவின் Samakov-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 72 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், பல்கேரியாவின் Emili Mihaylova-வை 15-14 என்ற கணக்கில் வென்றார்.

**<<<<>>>>**